RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22s74

OPEN ACCESS

# லஷ்மி சரவணகுமாரின் கானகன் நாவலில் சூழலியல்

அ. ராஜா முகமது [அ, *]

[அ] தமிழ்த்துறை, அரசு கலைக் கல்லூரி, உடுமலைப்பேட்டை-642126, தமிழ்நாடு, இந்தியா.

# Ecology in Lakshmi Saravanakumar's novel 'Kanagan'

A. Raja Mohammed [a, *]

[a] Department of Tamil, Government Arts College, Udumalaipettai-642126, Tamil Nadu, India

* Corresponding Author: afraja97@gmail.com

Received: 11-01-2022
Revised: 23-04-2022
Accepted: 28-04-2022
Published: 30-06-2022

Check for updates

**ABSTRACT**

The primary cause of deforestation is Man and also, he is the first to suffer from deforestation. The study is set to illustrate this under the title 'Ecology in the Kanagan novel'. The novel sets out to explain who is responsible for deforestation and why they are doing it. The destruction of elephants at the instigation of big bosses also highlights the irresponsibility of forest officials who do not see them. The novel also reveals that the hill people, 'Pali', are being blamed for the ongoing deforestation and killing of elephants for their selfish ends. Along with these, the medical team that visits from time to time in the name of medical help can find out about the rare herbaceous plants in the forest, which are known to steal vines and eventually become extinct. The novel depicts the opposition of the hill people to this disgrace and sets out to bring about social change which is caused as a consequence of that. This article explains the role that elephants play in augmenting forest resources and the benefits they bring to wildlife. It also suggests that elephants have evolved into tools that work for humans during the twentieth century. Laws enacted by the government to protect wild elephants are being scrutinized in this review article. The tigers are threatened as an endangered species, revealing the steps taken by the government to protect the tigers. The study also says that the people have to protect the forests and the rare species of elephants and tigers that live in them from the brink of extinction.

**Keywords:** Ecology, Lakshmi Saravanakumar, Pali, Kanagan, Wild Life, Forest

## முன்னுரை

இன்றைய நவீன இலக்கியங்கள் சூழலியல் குறித்தான கருத்துக்களை வெளிப்படுத்தி நிற்பதில் பெரும்பங்கு வகிக்கின்றன. அவ்வகையில் சாகித்ய அகாதெமியின் யுவபுரஸ்கார் விருதினைப் பெற்றுள்ள லஷ்மி சரவணகுமார் எழுதிய கானகன் நாவல் இன்றைய சூழலியல் தன்மையை எடுத்துரைப்பதாக அமைகிறது. இந்நாவல் மலைவாழ் மக்களாகத் திகழும் பளியர்களின் வாழ்வியலையும் அவர்கள் சந்திக்கும் சமகாலச் சிக்கல்களையும் வெளிப்படுத்தி நிற்கிறது. காடுகளின் அழிவு, வனவிலங்கு மனித மோதல்கள், யானைகளின் அழிவு மற்றும் வனஅதிகாரிகளின் அக்கறையின்மை இன்றைய சூழலியலில் ஏற்பட்டுள்ள பெரும் தாக்கத்தினை வெளிப்படுத்துவதாக இவ்ஆய்வு அமைகிறது.

## கானகன் நாவலில் சூழலியல்

சூழலியல் என்பது பொதுவாகச் சுற்றுப்புறம் சார்ந்த சூழலை உள்ளடக்கியதாக அமைகிறது. சுற்றுச்சூழல் என்பது மனிதனைச் சுற்றியுள்ள சமூக, பொருளாதார, உயிரியல், இயற்பியல், வேதியக்காரணிகளின் கூட்டாகும். காடுகள் மற்றும் அவற்றைச் சார்ந்த வன விலங்குகள், மனிதர்களை உள்ளடக்கியதாகச் சூழலியல் உள்ளது. இவற்றை அறிவதற்குச் சூழியல் கல்வி இன்றியமையாததாக விளங்குகிறது. "சூழியல் கல்வி எனும் விஞ்ஞானப் பாடமானது தாவரங்களுக்கும், மனிதர்களுக்கும், வனவிலங்குகளுக்கும் இடையே உள்ள தொடர்பைப் பற்றியும் அவற்றிற்கும் அவை வாழும் சூழியல்களுக்கும் இடையே உள்ள தொடர்பைப் பற்றியும் விளக்குகிறது" (Murugan, 2004). இதன் அடிப்படையில் காடுகளும் அவற்றைச் சார்ந்த வனஉயிர்களின் வாழ்வியலையும் கானகன் நாவல் வழி அறிய முடிகிறது.

## காடுகளின் அழிவு

காடுகளின் அழிவிற்கு முதன்மைக் காரணம் மனிதனின் பேராசை ஒன்றுதான். சுயநலத்திற்காகவும் வாழ்விடங்களுக்காகத் தேவைப்படும் கட்டைகளுக்காகவும் காடுகளின் தேவையை உணராது அழிக்கிறான்." காடுகள் அழிக்கப்பட்டு விவசாய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாலும்" என்ற வரிகளின் வழி காடுகளை மக்கள் விவசாயம் செய்வதற்காகவும் அழிக்கிறார்கள் என்பதும் புலப்படுகிறது (Murugan, 2004). மனிதன் வாழ்வதற்கு உணவு தேவைதான். ஆனால் அவனுக்கு மட்டுமின்றி உடன் இருப்பவர்கள் தேவைக்காகவும் அதிக ஆசையினாலும் நிறைய இடங்களை ஆக்கிரமிப்பு செய்ய வேண்டிக் காடுகளை அழிக்கிறான்.

## கானகன் நாவலில் காடுகளின் அழிவு

கானகன் நாவலில் மொக்கநிலைப் பளியக்குடி என்னும் ஊரில் பல்வேறு முதலாளிகள் தங்களின் செல்வத்தைப் பெருக்க வேண்டிக் காடுகளை அழித்து அரசினால் தடைசெய்யப்பட்ட கஞ்சாச் செடிகளைக் காடுகளில் வளர்க்கின்றனர். தேனிக்கார முதலாளிகள், பங்களாக்காரர்கள், மலையாள முதலாளிகள் போன்றோர் மொக்கநிலைப் பளியக்குடிக்கு அருகில் காடுகளை அழித்து கஞ்சாச் செடிகள் வளர்ப்பதையும் "மொக்கநிலைக்கு மேல் குரங்காறு போகிற வழி எங்கும் விரவிக் கிடந்த மரங்களும் காட்டுச்செடிகளும் அகற்றப்பட்டு புதிய நடுகைக்கு தயாரானதைப் போல் கருப்புநிற ஈரமணல் எங்கும் எட்டிப்பார்த்துக் கொண்டிருந்தது" என்னும் வரிகளின் மூலம் கஞ்சா செடிகள் விதைப்பதற்கு நிலங்கள் சமன்படுத்தப்பட்டிருந்ததை உணர முடிகிறது (Lakshmi Saravanakumar, 2016).

முதலாளிகள் பலர் காடுகளில் கஞ்சாச் செடிகள் விதைக்க வந்திருந்தமையைப் "பன்னெடுங்காலமாய் தன் வயிற்றில் சுமந்த மரங்களையெல்லாம் இழந்த துயரில் இருந்த அதன் உடல் எங்கும் கஞ்சா செடிகளை நட தேனியிலிருந்தெல்லாம் கூட இப்போது முதலாளிகள் வந்து இடம் பார்த்துவிட்டு போனார்கள்" என்ற வரிகள் உணர்த்தி நிற்கின்றன. மேலும் காடுகளின் உள்ளுணர்வு அங்குள்ள தாவரங்களையும், விலங்குகளையும், மரங்களையும் மையப்படுத்தி உள்ளதை அறியலாம்.

காடுகளில் புதிய கஞ்சாத் தோட்டங்கள் தோன்றியமையைக் "காட்டு மரங்கள் இலையுதிர்க்க துவங்கியிருந்த மார்ச் மாதத்தின் துவக்கத்தில் குரங்காற்றைச் சுற்றிலும் புதிய கஞ்சா தோட்டம் தோன்றியிருந்தது" என்ற வரிகள் சூழலியலில் ஏற்படுத்திய மாற்றத்தின் தன்மையை வெளிக்கொணர்வதாக அமைகிறது (Lakshmi Saravanakumar, 2016).

## காடுகளின் அழிவால் ஏற்படும் விளைவுகள்

உலகின் மக்கள் அனைவருக்கும் உயிர்வாழ்தற்குத் தேவையான பிராணவாயுவைத் தருபவையாகவும், மழைப்பொழிவிற்கும் முக்கியமான காடுகள் அமைந்துள்ளன. புவி வெப்பமாவதைத் தடுப்பதற்கும் காடுகள் இன்றியமையாததாக அமைகிறது. இவற்றைவிடக் காடுகளின் அழிவால் மிகவும்

பாதிக்கப்படுவது வனவிலங்குகள். விலங்குகள் தங்களின் இருப்பிடத்தின் இழப்பால் அவற்றின் வாழ்க்கையின் மிகுந்த இன்னல்களை அடைகின்றன.

விலங்குகளின் உணவுமுறைகளில் மாற்ற வேட்டை விலங்குகள் தங்களின் வேட்டையாடி உண்ணும் முறைகளைவிட்டு மனிதன் வசிக்கும் இடங்களுக்கு வருகின்றன. இவற்றின் அடிப்படையில் மனிதனுக்கும் வனவிலங்குகளுக்கும் இடையில் மோதல்கள் உண்டாகின்றன. காடுகளை அழிப்பதன் மூலம் மனிதன் தன்னுடைய அழிவைத் தானே தேடிக்கொள்கிறான். தாகம் தீர்க்கத் தண்ணீரை விலை கொடுத்து வாங்கும் மனிதன் சுவாசிப்பதற்குத் தேவையான காற்றை விலை கொடுத்து வாங்க வேண்டிய காலம் வெகுதொலைவில் இல்லை. காடுகளின் அழிவால் ஏற்படும் இயற்கை மாற்றங்களாவன "உலகளவில் ஏற்பட்டிருக்கும் பசுங்குடி விளைவுகள், ஓசோன் அடுக்கில் ஏற்பட்டுள்ள ஓட்டை, சுவாச நோய்கள், இதய நோய்கள் போன்றவைகளுக்கெல்லாம் காடுகளின் அழிப்பு காரணமாகின்றன". இத்தகைய சூழலில் மிகுந்த பாதிப்பைப் பெறுபவர்கள் மனிதர்களாகத்தான் இருக்கின்றனர் (Lakshmi Saravanakumar, 2016).

## யானைகளின் வழித்தடம் பறிபோதல்

காடுகளில் வாழும் உயிரினங்களில் மிகுந்த கூர்மை அறிவுடைய விலங்காக யானைகள் உள்ளன. யானைகள் கூட்டமாக வாழும் பாலூட்டி இனமாகும். யானைகள் ஒரே இடத்தில் இல்லாமல் இடம்பெயர்ந்து கொண்டே இருக்கும் உயிரினம். யானைகள் காடுகளில் ஒரு பாதையில் பயணித்தால் அதே பாதையைத்தான் மீண்டும் மீண்டும் பயன்படுத்தும். யானைகள் ஒரு நாளிற்குச் சராசரியாகத் தன்னுடைய உடல் எடையில் 10 சதவீதம் உணவை உட்கொள்ளும் "ஒரு யானைக்கு நாளொன்றுக்கு சுமார் 300 கிலோ வரை பசுந்தாவர உணவு தேவைப்படுகிறது" (Muhammad Ali & Yoganand, 2004).

கானகன் நாவலில் யானைகளின் வழித்தடம் பறிபோதல் நிலையைச் சுட்டும் விதமாக "ஒரு குளம் குட்ட சுனைன்னு எதையும் விடாம தண்ணியப் பூராம் எடுத்துப்புட்டாங்க… குடிசை போட்டிருக்கிறது எல்லாம் யானை போற தடத்துல" என்னும் வரிகள் வெளிக்காட்டுகின்றன (Lakshmi Saravanakumar, 2016).

கஞ்சாத் தோட்டம் அமைந்துள்ள இடங்கள் யானைகள் அடிக்கடி உணவு தேடிவரும் இடம் எனவும் தோட்டம் உள்ளமையால் உணவு இல்லாமல் பரிதவிக்கும் நிலையை, "அதுக்கு புல்லும் தண்ணியும் இருந்த எடத்ததானடா இவனுக வெட்டி மட்டப்படுத்தி கஞ்சா தோட்டம் ஆக்கியிருக்காங்க காலம் காலமாக அங்கேயே புல்லத் தின்னு பழக்கப்பட்டு இந்த மாசத்துக்கு இந்த எடத்திற்கு போனா இது இருக்கும்னு யானைக வருதுக….. வந்துப்பாத்தா இங்க ஒன்னு இருக்கதில்ல…. இந்தக் கோவத்துல நாணப்புல்லத் தேடி மொத்த காட்டயும் சுத்துதுக" என்னும் வரிகள் விளக்குகிறது. இத்தகைய சூழ்நிலையில் யானைகள் உணவு இல்லாமல் உணவு தேடி அலையும் நிலை ஏற்படுகிறது. யானைகள் தங்களின் உணவுத் தேவைக்காக மனிதர்களின் விவசாய நிலத்திற்கு உணவு தேடி வருகின்றன. "யானைகள் வயல்களுக்குள்ளும் ஊருக்குள்ளும் இறங்குகின்றன" என்னும் வரிகள் காட்டிச் செல்கின்றன (Lakshmi Saravanakumar, 2016).

யானைகள் தங்களின் விளைநிலங்களில் இறங்குவதைத் தாங்க முடியாத சூழலில் அவற்றை விரட்ட முற்படுகின்றனர். இதனால் மனிதனுக்கும் யானைக்குமிடையேயான மோதல்கள் உண்டாகின்றன. "பருத்திப்போடு முழுக்க யானைகள் எல்லாத் திசைகளிலிருந்தும் கஞ்சா தோட்டத்திற்குள்ளும், குடிசைகளுக்குள்ளும் இறங்கிக் கொண்டிருப்பதாய் ஆட்கள் பேசிக்கொண்டனர்". கஞ்சாத் தோட்டங்களில் யானைகள் இறங்குவதைக் கண்டு முதலாளிகள் கோபம் கொள்கின்றனர். இதனால் அவற்றை விரட்டுவதற்குத் தங்கப்பன் என்ற வேட்டைக்காரனை அணுகுகின்றனர். தங்கப்பன் யானைகளை விரட்டுவதற்குப் பதிலாகப் கொல்ல முற்படுகிறான். தங்கப்பன் யானைகளைக் கொன்றதை "கொல்லப்பட்ட இரண்டு யானைகளின் பெருந்தந்தங்களை அவற்றின் தலையோடு எடுத்துக் கொண்டு தங்கப்பனின் ஜீப் நள்ளிரவில் அன்சாரியின் வீட்டுக்கு வந்தபொழுதே அங்கிருந்த

எல்லோருக்கும் அந்தக் காட்சி அச்சுறுத்தக்கூடிய ஒன்றாக தெரிந்தது" என்னும் வரிகள் மூலம் அறியலாம் (Lakshmi Saravanakumar, 2016).

## சூழலியலில் யானைகளின் பங்களிப்பு

யானைகள் காடுகளில் உள்ள மரங்களின் கிளைகளை முறித்து உணவு உட்கொள்வதாலும் அவற்றின் சாணத்தினாலும் பல்வேறு நன்மைகள் இயற்கைக்கு கிடைக்கின்றன. யானைகள் வனத்தை வளர்க்கின்றன. மரத்தின் படர்கிளைகளை யானைகள் முறித்துப் போடுவதால் கதிரவனின் ஒளி அடர்ந்த காட்டினுள் புகுந்து நிலத்தை அடைகின்றன. இதனால் புற்கள் உள்ளிட்ட உணவுத் தாவரங்கள் செழித்து வளர்ந்து தாவர உண்ணிகளுக்கு அதிக தீவனம் கிடைக்கின்றது. இதனடிப்படையில் யானைகள் வனத்தின் நிலத்தைச் செம்மைப்படுத்துகின்றன. புற்களை உண்ணும் மான் போன்ற விலங்குகளுக்கு உணவுகளை அதிகரிக்கவும் செய்கின்றன.

யானைகள் வனத்தைப் பெருக்கும் வன உயிர்களில் முதன்மை பெறுகின்றன. காடுகளின் வளர்ப்பில் "யானைகள் புசிக்கப்பட்ட விதைகள் யாவும் உருளைத் துண்டுகளான சாணத்துடன் வெளியேற்றப்படும் போது அதன் முளைப்புத் திறன் கூடுகிறது. மேலும் யானை சுற்றித்திரியும் எல்லா இடங்களிலும் அவ்விதைகள் பரவலுக்கு வழியாகி, மண்ணில் முளைத்து செழித்து வளர்ந்திட வாய்ப்பு கிடைக்கிறது" இத்தகைய சிறப்புமிக்க யானைகளைக் காப்பாற்ற வேண்டிய சூழலில் மக்கள் உள்ளனர். வனங்களையும் யானைகளையும் காப்பது அரசின் கடமையாகும் (Muhammad Ali & Yoganand, 2004).

## யானைகளைப் பாதுகாக்க இயற்றப்பட்ட சட்டங்கள்

- "மெட்ராஸ் காட்டு யானைகள் பாதுகாப்புச் சட்டம் - 1873.
- அகில இந்திய யானை பாதுகாப்புச் சட்டம் - 1879" (Singh, 2016)

இத்தனை சட்டங்கள் இருந்தும் யானைகளின் இன்றைய நிலையை,

"மனிதர்களின் கைகளில்
சிக்காத காட்டு யானைகள்
எந்த அளவுக்கு நிம்மதியாக
வாழ்கின்றன என்பது
தெரியவில்லை. ஆனால்
பல்வேறு விதங்களில்
மனிதர்களுக்காக உழைத்து
ஆயிரக்கணக்கான யானைகளில்
எந்த யானையும்
நிம்மதியாக இல்லை"

என்னும் கருத்தும் சிந்திக்கற்பாலது (Jayabaskaran, 2005).

இத்தகைய சூழலை மாற்ற வேண்டியே மத்திய அரசு 1977ல் திருத்தியமைக்கப்பட்ட யானைகள் பாதுகாப்புச் சட்டத்தை கொண்டு வந்தது. இத்திட்டத்தின் பலனாக 1991ல் 3260ஆக இருந்த தமிழக யானைகளின் எண்ணிக்கை 2001ல் 3635ஆக உயர்ந்துள்ளது. யானைகளை இத்தகைய திட்டத்தின் மூலம் பாதுகாத்து வந்தாலும் யானைகளின் அழிவு நிகழ்ந்து கொண்டேதான் இருக்கின்றன என்பதை மறுக்க முடியாது.

சட்டங்கள் எத்தனை உருவாக்கினாலும் எண்ணற்ற வனஅதிகாரிகளை நியமித்து கண்காணித்தாலும் வனவிலங்குகள் பாதுகாக்கப்படுதல் மக்கள் கைகளிலேயே உள்ளது. மனிதன் மனமாற்றம் ஒன்றே வனவிலங்குகள் மரணிக்கும் நிலையை மாற்றும்; காடுகள் அழிப்பு தவிர்க்கப்படும்.

## கானகன் நாவலில் புலிகளின் வேட்டை

கானகன் நாவலில் தங்கப்பன் மொக்கநிலைக்காட்டில் சிறந்த வேட்டையாளனாகத் திகழ்கிறான். அவன் புலியை வேட்டையாடியதை "எழுந்து கொள்ள முயன்று முடியாமல் ஒரே இடத்திலேயே சுற்றிக் கொண்டிருந்த புலியை வேகவேகமாக அடுத்த ரவையை போட்டு தங்கப்பன் மீண்டும் சுட்டான். இந்தமுறை அவன் குறி மிகச் சரியாக அதன் வயிற்றில் பட புலி முன்னை விடவும் அதிக அதிர்வுகளுடன் விழுந்தது" என்ற வரிகளின் மூலம் உணரமுடிகிறது. நம் தேசிய விலங்கும், வலிமை மிகுந்த புலியையும் மனிதன் விட்டு வைக்கவில்லை என்பதை உணர்த்துகிறது (Lakshmi Saravanakumar, 2016).

தங்கப்பன் வனத்தில் புலிமட்டுமின்றி யானை, குரங்கு, மான் போன்றவற்றையும் வேட்டையாடுகிறான். இவற்றையெல்லாம் கண்டு கொள்ளாதவர்களாக வனத்துறை அதிகாரிகள் உள்ளதையும் கானகன் நாவல் வெளிக்காட்டுகிறது. யானைகள் கொல்லப்பட்டதை முன்பே அறிந்த "பாரஸ்ட்காரர்கள் விடுமுறை எடுத்துக் கொண்டு செல்ல நினைத்தனர். சிலர் தேவையான பணத்தை வாங்கிக் கொண்டு தங்கப்பனுக்கு உதவியாக இருந்தனர்" இவ்வரிகளின் மூலம் வனங்களையும் வன உயிர்களையும் பாதுகாக்க நிர்ணயிக்கப்பட்ட வன அதிகாரிகள் வனத்தைக் காப்பதைவிட்டு வேட்டைக்காரனுக்குத் துணையாக நிற்பதையும் காட்டுகிறது (Lakshmi Saravanakumar, 2016).

வன அதிகாரிகள் குற்றம் செய்த தங்கப்பனை விட்டுவிட்டு அக்குற்றத்தை மறைக்க மலைவாழ் மக்கள் பளியர்கள் மீது குற்றங்களைச் சுமத்துகின்றனர். இதற்கு மூலக்காரணமாக முதலாளிகள் உள்ளமையை "இதை சாக்காக வைத்துக் கொண்டு அந்த இடத்தை எப்படியாவது காலி செய்து கொடுத்துவிடச் சொல்லி முதலாளி பாரஸ்ட் ஆட்களுக்கு பெருந்தொகை ஒன்றை கொடுத்திருந்தார். முதலாளியின் பெருந்தொகை முன்னை விடவும் தீவிரமாக வேலை செய்ய வைத்தது" என்பதன் வழி அறியலாம் (Lakshmi Saravanakumar, 2016).

## முடிவுரை

காடுகளைக் காப்பது மனிதன் மற்றும் அரசின் முதன்மைக் கடமையாகும் என்பதை எடுத்துரைத்தும், யானை, புலி போன்ற வனஉயிர்களை அழியும் தருவாயிலிருந்து பாதுகாத்து அடுத்த தலைமுறை அவற்றை அறிவதற்கு வழிசெய்யும் வகையில் அமைகிறது. மேலும் வனங்களைக் காக்கும் பொறுப்பாளர்களாக வனஅதிகாரிகள் மாற்றம் அடைய வேண்டும். கஞ்சா தோட்டம் வளர்ப்பதற்கு காடுகளை அழித்தல், யானை போன்ற வனவிலங்குகள் கஞ்சா தோட்டத்திற்குள் வருவதால் வனவிலங்குகள் அழிக்கப்படுதல். மூலிகைச் செடிகள் களவாடப்படுவதன் மூலம் வாழ்வாதாரம் பாதித்தல். வன அதிகாரிகளின் பொறுப்பற்ற தன்மை ஆகியவற்றின் காரணமாக இயற்கையின் இயல்பில் மாறுபாடு ஏற்பட்டு மிகப்பெரும் அவலநிலைக்கு தள்ளப்படுவதற்கான சூழலை கானகன் நாவல் வெளிப்படுத்தி அமைகிறது.

## References

Jayabaskaran, V., (2005) Jayabaskaran Katturaigal, Vazhuthi Veliyeettagam, Chennai, India.

Lakshmi Saravanakumar, (2016) Kaanagan, Malaichol Pathippagam, Ooty, India.

Muhammad Ali, S. Yoganand, K., (2004) Yanaikal Azhiyum Peruyir, Malaipadu kadam Padippakam, Mettupalayam, India.

Murugan, A., (2004) Sulaliyal Kalvi, Janani Pathippagam, Nagercoil, India.

Singh, G., (2016) Elephant Hunting in the Colonial Assam, Proceedings of the Indian History Congress, 77, 759–765.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License